# உண்மையை தெரிந்துகொள்ள ஆசையா?






Private Circulation

பிள்ளைகள் அவர்களை பெற்றெடுத்து, வளர்த்த தந்தையை மட்டும் தான் தன்னுடைய தகப்பன் என்று சொல்ல வேண்டும். பிள்ளைகள் அந்த பெற்றெடுத்து வளர்த்த தகப்பனை தன்னுடைய தகப்பன் என்று சொல்லாமல், வேறு ஒருவரை தன்னுடைய தகப்பன் என்று கூறினால், நிச்சயமாகவே, அந்த பெற்றெடுத்து வளர்த்த தகப்பனுக்கு கோபம் வரும். அந்த பிள்ளைகளின் தாய்(அம்மா), கையில் கிடைத்ததை எடுத்து, அந்த பிள்ளையை அடிப்பார் அல்லவா?

நீங்கள் மேற் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்கின்றீர்களா? நீங்கள் கண்டிப்பாக இந்த கருத்தை ஏற்றுக் கொள்வீர்கள். அதே போல, மக்கள் அனைவரும், தங்களைப் படைத்த, உருவாக்கிய, பாதுகாக்கிற, மெய்யான கடவுளை மட்டுமே வழிபடவேண்டும் அல்லவா?

இந்திய தேசத்தில் உள்ள நாம் இயற்கையாகவே தெய்வ பக்தி நிறைந்தவர்கள். அதனால் தான் ஒரு இலட்சத்திற்கும் மேல் கடவுளுடைய அவதாரம் உண்டு என்று சொல்லி, பல கடவுள்களை வழிப்பட்டுவந்தோம், இன்னும் அநேகர் வழிபடுகின் றார்கள். சிலமனிதர்கள்(ரசிகர்கள்), நடிகை நடிகர்களுக்கு கூட கோயில் கட்டுகின்றனர். அரசியல் தலைவர்களுக்கும், கிரிக்கெட் வீர்ர்களுக்கும், சாதனையாளர்களுக்கும் கோயில் கட்டியிருக் கிறார்கள்.

200 அல்லது 300 ஆண்டுகளுக்கு பிறகு வாழும் மக்கள் நடிகையின் அவதார், காட்டின் அவதார், கிரிக்கெட் அவதார் என்று சொல்லி, அவர்களை தெய்வம்(கடவுள்) என்று வழிபட வாய்ப்பு உள்ளது. சிலர், மற்ற மனிதர்களை கூட கடவுளின் அவதார் என்று இப்பொழுதே சொல்லி வருகிறார்கள். நாம் சிந்தித்து பார்க்க வேண்டும்.

உண்மையான கடவுள் (தெய்வம்) என்பவர், அனைத்தையும் படைத்தவர். பாதுகாப்பவர். வழிநடத்துபவர். கடவுளுக்கு முடிவு என்பதே இல்லை. அந்த உண்மையான கடவுளே முதலும் முடிவுமாய் இருக்கிறார்.

மெசப்படொமிய(ஈரான்/ஈராக்/இஸ்ரேல்) நாகரீகம் தான், மிகப் பழமையான நாகரீகம்(கி.மு.4500). சிந்து சமவெளி நாகரீகம்(இந்தியா) கி.மு. 2500-இல் தோன்றியது. சில மனிதர்கள் ஈரான்/ஈராக்/இஸ்ரேலில் இருந்து இந்தியாவிற்கு குடி பெயர்ந்தனர் என்று வரலாறு சொல்கிறது.

இப்படியிருக்க, அவர்களுடைய கடவுளும், இந்தியாவின் கடவுள்களும் (தெய்வங்கள்) வேறு வேறாக, எப்படி இருக்க முடியும்? சிந்தித்துப் பாருங்கள்!

உலக வரலாற்றில், ஒரு தெய்வம் மனிதனாகப் பிறந்து(உண்மையான கடவுளின் ஒரே ஒரு அவதாரம்), மனிதர்களின் பாவங்களுக்காக, இரத்தம் சிந்தி மரித்தார். மனிதர்களை பாவங்களிலிருந்தும் சாபங்களிலிருந்தும் மீட்க, அந்த உண்மையான கடவுள், இந்த அளவிற்கு மனித இனத்தின் மீது அன்புகொண்டு, நமக்காக மரித்தார். மூன்றாம் நாளில், சாவினின்று உயிர்த்து எழுந்தார். இன்றும் உயிரோடிருக்கிறார்!

## அவரின் பெயரை தெரிந்துகொள்ள, உங்களுக்கு விருப்பமா?

அவர் தான் உலக இரட்சகர் இயேசு கிறிஸ்து. அவர் தன்னுடைய சீடர்களின் பாதங்களை கழுவி, அவருடைய தாழ்மையை தன்னுடைய மனித வாழ்வில் வாழ்ந்து காட்டினார்.

ஒரு பெரிய கம்பெனியில் வேலை செய்கிற வேலையாட்கள், அந்த கம்பெனியின் முதலாளி சொல்கிற வேலையை செய்யவேண்டும். அந்த வேலையாட்கள் முதலாளி சொல்வதற்கு கீழ்படியாமல் போனால், வேலையில் இருந்து அவர்களை நீக்கி, கம்பெனியை விட்டு வெளியே அனுப்பி விடுவார்.

அது போல, வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின ஜீவனுள்ள தேவனிடத்திற்கு(இயேசு கிறிஸ்துவிடம்) நீங்கள் மனம்திரும்ப வேண்டுமென்று உங்கள்மேலுள்ள அக்கரையினால் உங்களுக்கு பிரசங்கிக்கிறோம் (அப்போஸ்தலர் 14:15).

அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, இயேசு கிறிஸ்துவை, சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்பவர்கள் மட்டுமே, மோட்சம்(பரலோகம்) செல்ல முடியும்.

வேறு எந்த வழியாகவும், மோட்சம் செல்ல முடியாது என்று பரிசுத்த வேதாகமம்(*The Holy Bible*) யோவான் *14:6* -ல் தெளிவாக சொல்கின்றது. வேறு எந்த அவதாரமும் இயேசு கிறிஸ்துவை போல இப்படிப்பட்ட அதிகாரத்துடன் சொல்லவில்லை.

உலகின் பல பகுதிகளை அரசாண்ட ரோம அரசன் கான்ஸ்டான்டின்(*Constantine*) இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுகொள்ளும் வரையிலும், பல அரசர்கள் உண்மையான கிறித்துவர்களை துன்புறுத்தியும், பலரை கொன்றும் இருக்கிறார்கள். அந்த காலத்தில் அரச கட்டளைக்கு மக்கள் கீழ்ப்படிய வேண்டும். அந்த கான்ஸ்டான்டின் அரசன் கி.பி *312* -ல் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டபிறகு, அவன் ஆளுகைக்கு உட்பட்ட அனைத்து நாட்டு மக்களும் இயேசு கிறித்துவை சொந்த இரட்சகராக ஏற்று கொண்டார்கள்.

எனவே இயேசு கிறிஸ்து, வெள்ளைக்கார கடவுள் என்றோ அல்லது வெளிநாட்டு கடவுள் என்றோ நினைக்கவேண்டாம். இயேசு கிறிஸ்துவே நம் அனைவருக்கும் உலக இரட்சகர், அவரே உண்மையான தெய்வம்.

## இந்து வேதத்தில் / உபநிடத்தில் / நாமாவளிகளில் இயேசு கிறிஸ்து (பிரஜாபதி)

பிரஜாபதி என்றால் அனைத்து உயிர்களையும் படைத்த இறைவன் என்று அர்த்தம் (*the Lord of all creations*). பின் வரும் மந்திரங்கள் இயேசு கிறிஸ்துவில் மட்டுமே நிறைவேறியது.

*1.* ஓம் ஸ்ரீ தரித்திர நாராய நமஹ - ஏழைக் கோலத்தில் மனிதனாய் உலகத்தில் வெளிப்பட்ட தேவனே உம்மை போற்றுகிறேன் - லூக்கா *2:7*

2. ஓம் ஸ்ரீ கன்னி சுத்தாய நமஹ - கன்னியின் வயிற்றில் பிறந்தவரே உம்மை போற்றுகிறேன் - ஏசாயா *7:14,* மத் *1:18,19,23*

3. ஓம் ஸ்ரீ பிரம்ம புத்ராய நமஹ - பரலோக பிதாவின் குமாரனே உம்மை நமஸ்கரிக்கிறேன் - யோவான் *3:16*

4. ஓம் ஸ்ரீ உமார்த்தாயாய நமஹ - பரிசுத்த ஆவியினால் பிறந்தவரே உம்மை ஸ்தோத்தரிக்கிறேன் - மத் *1:8*

5. ஓம் ஸ்ரீ விதீர்ஷ்பாய நமஹ - விருத்த சேதனம் செய்து கொண்டவரே உம்மை துதிக்கிறோம் - லூக்கா *2:21*

6. ஓம் ஸ்ரீ விருச்ச சூல அருந்தாய நமஹ - சூலம் போன்ற மரத்தில் பலியானவரே உம்மை ஆராதிக்கிறேன் - லூக்கா *23:33*

7. ஓம் ஸ்ரீ பஞ்சகாயாய நமஹ - உடம்பில் ஐந்து காயங்களை பெற்றவரே உம்மை வாழ்த்துகிறேன் - ஏசா *53:5,* சங் *22:16*

8. ஓம் ஸ்ரீ ம்ருத்யும் ஜெயாய நமஹ - மரணத்தை ஜெயித்தவரே உம்மை போற்றுகிறேன் - *1* பேதுரு *2:24*

9. ஓம் ஸ்ரீ தக்ஷிணா மூர்த்தியே நமஹ - பிதாவின் வலது பக்கத்தில் அமர்ந்திருப்பவரே உம்மை வாழ்த்துகிறேன் - மத் *24:64;* அப் *7:55*

10. ஓம் ஸ்ரீ தியாகேஷ்வராய நமஹ - தம் இன்னுயிரை தியாகம் செய்த வள்ளலே உம்மை போற்றுகிறேன் - எபேசியர் *5:2,* எபிரெயர் *9:28, I* கொரிந்தியர் *15:3-4*

11. ஓம் ஸ்ரீ வைத்தீஸ்வராய நமஹ - எங்கள் நோய்களை எல்லாம் சுகப்படுத்தும் பரிகாரியே உமக்கு ஸ்தோத்திரம் - யாக்கோபு *5:14-15,* சங்கீதம் *41:3; 30:2*

12. ஓம் ஸ்ரீ பாப நாசகாயாய நமஹ - எங்களின் பாவங்களைப் போக்குபவரே உமக்கு ஸ்தோத்திரம் - *I* தீமோத்தேயு *1:15,* அப்போஸ்தலர் *4:12,* மத்தேயு *1:21*

எந்த மொழியில் மந்திரித்தாலும் இயேசு கிறிஸ்து ஒருவரே தெய்வம். நீங்கள் அறியாமல் ஆராதிக்கிற அவரையே நான் உங்களுக்கு அறிவிக்கிறேன் (அப் *17: 23*).

**கதையை நம்பாதீர்கள். மாறாக, வரலாற்றின் உண்மையை நம்புங்கள்.**

## இஸ்லாமியர்களின் குரானில் இயேசு கிறிஸ்து(*AD 600*)

இஸ்லாமியர்களின் குரானில் அதிகாரம் *3:45-55*, இயேசு கிறிஸ்துவுக்கு பின் வரும் பெயர்கள் கொடுக்கப்பட்டு இருக்கிறது.

களிமதுல்லாஹ்(*Kalimatullah*) - இயேசு கடவுளின் வார்த்தை

ருஹுல்லாஹ்(*Ruhullah*) - இயேசு கடவுளின் ஆவியானவர்

ஈசா(*Esa*) - இயேசு கிறிஸ்து

இஸ்லாமியர்களின் வேதத்தின்படி, கடவுள் தம்முடைய வார்த்தையால், இந்த உலகத்தைப் படைத்தார். இது உண்மை என்றால், இயேசுவே கடவுள்(தெய்வம்) என்பதும் உண்மையாகும். (யோவான் *1:1-3, 10, I* கொரிந்தியர் *8:6*, சங்கீதம் *95:1-7*, எபிரெயர் *11:3*, அப்போஸ்தலர் *4:24*).

குரானில் இயேசுவைப் பற்றி *25* இடங்களில் சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால், முகம்மது நபியைப் பற்றி *4* இடத்தில் மட்டுமே சொல்லப்பட்டு இருக்கிறது.

குரான் *3:45-55* - பின் வருமாறு சொல்கிறது:

இயேசு மரித்தவர்களை உயிர்ப்பித்தார், பிறவி குருடனை சுகமாக்கினார், நோயிலிருந்து விடுதலை தந்தார், சொர்கத்திற்கு சென்றார், இன்றும் உயிரோடு இருக்கிறார், மீண்டும் வருவார் என்று குரானில் எழுதப்பட்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட அற்புதங்களை முகம்மது நபி செய்யவில்லை. அவர் மரித்து விட்டார். மீண்டும் இந்த உலகத்திற்கு வரமாட்டார்.

குரான் *10:94* - பின் வருமாறு சொல்கிறது:

குரானில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால்,

பைபிள்(*Bible*) படியுங்கள் அல்லது பைபிள்(*Bible*) படிப்பவர்களிடம் இருந்து தெரிந்து கொள்ளுங்கள். ஏற்கனவே இந்த உண்மையைப் பற்றி, பைபிளில்(*Bible*) சொல்லப்பட்டு இருக்கிறது. **நீங்கள் உண்மையான கடவுளின் பிள்ளைகளாக மாற வேண்டுமா அல்லது கடவுளின் அடிமையாக இருக்க வேண்டுமா?**

பைபிள்(*Bible*) யோவான் *1:12* பின் வருமாறு சொல்கிறது: இயேசுவின் நாமத்தின் மேல் விசுவாசம் உள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய(கடவுளின்) பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். **குரானில் எல்லா அதிகாரத்திலும், அல்லா(*Allah*) எஜமான் என்றும், அல்லா(*Allah*) மனிதர்களை அடிமையாக அழைக்கிறார் (பிள்ளைகளாக அல்ல) என்றும் எழுதப்பட்டு இருக்கிறது.**

இயேசு பரிசுத்த வேதத்தில்(*Bible*), உங்கள் பகைவரிடமும் அன்பு கூறுங்கள்; உங்களை துன்புறுத்து வோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள் என்று இயேசு கூறுகிறார். நாம் நம்முடைய எதிரியை அன்பு செய்ய ஆரம்பித்தால், இந்த உலகத்தில் நாம் அமைதியை காண முடியும். அப்படி செய்யாவிட்டால், பகை உணர்வு பெருகி, இறுதியில் தீவிரவாதம் அதிகமாகி, அழிவே வரும். நிம்மதி இருக்காது. பரிசுத்த வேதத்தில் (மத்தேயு *24:4,7,8,14*) உலகத்தின் முடிவு பற்றி இயேசு கிறிஸ்து முன்னறிவித்தது நிறைவேறி கொண்டிருக்கிறது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனம் எழும்புகிறார்கள், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகிறது. பரலோக ராஜ்யத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜனங்களுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும், அப்போது உலகத்தின் முடிவு வரும். **நீங்கள் மதம் மாற வேண்டும் என்று நாங்கள் சொல்லவில்லை. மாறாக, நீங்கள் மனம் மாறி, உண்மையான ஒரே தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை வழிபட வேண்டும். உண்மை, நீதி, நேர்மையோடு, ஜாதி பாகுபாடு இல்லாமல் அன்பு காட்டி வாழ வேண்டும், மோட்சம் செல்ல வேண்டும் என்று தான் விரும்புகிறோம். யாரையும், எந்த மதத்தையும் குறைக்கூறுவது எங்கள் நோக்கமல்ல.**

இந்த உண்மை உங்களுக்கு பிடித்திருந்தால், தயவு செய்து, இந்த செய்தியை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். மெய்யான தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவின் அமைதியும் சமாதானமும் உங்களுக்கு உண்டாவதாக!

*We are distributing this small track as per Indian Constitution Law Article 25. Our intention is not to convert anyone to Christian religion, but to know the truth. This track is intended for private circulation only.*

மேலும் விபரங்களுக்கு உங்களுக்கு அருகில் உள்ள கிறிஸ்தவ சபையை அணுகவும்.

தொடர்புக்கு:

Preach the Truth Ministries, Bangalore
Email: ptmm.india@gmail.com